மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

The Significance of practices of 'Arampaduthal': A study based on Arakkavi (Singing for extinction) of the Eastern Province of SriLanka

Prof. Sinnathamby Santhirasegaram

Professor, Department of Tamil Studies, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka

Manuscript ID : **MT212A0116**
Volume : **3**
Issue : **1**
Month : **March**
Year : **2023**
Received: 13.01.2023
Revised: 06.02.2023
Accepted: 01.03.2023
Published: 04.03.2023
Pages : 78-87
DOI: 10.5281/zenodo.7697646

ABSTRACT:

'Arampaduthal' (anathematizing – curse or declare to be evil or anathema or threaten with divine punishment) means anathematizing or singing for extinction. However, within this tradition, the voice against social injustice stands out. The tradition of 'Arampaduthal' which has been in the Tamil literary tradition for a long time, has also been studied as a form of literature in the Eastern Province of Sri Lanka. As a result, social trust is essential to the formation and practice of 'Arampaduthal'. 'Arampaduthal' addition, these people have fearlessly expressed their opposition against the anti-people activities of the powerful people in their area. More than that, these people have also used 'Arampaduthal' as their professional ritual activity. They also anathematized animals that were harmful to humans. However, the belief that 'Arampaduthal' are destructive/harmful and the hatred of the social authorities towards this singing tradition has led to the decline of the tradition of 'Arampaduthal' even though 'Arampaduthal' has been an important part of social communication among the people of this region. In that way, the aim of the study is to look at how 'Arampaduthal' has been learned among the Tamils in the Eastern Province of Sri Lanka and what their social significance is. This research is carried out based on fieldwork.

KEYWORDS:

Arampaduthal, Rituals, Anathematizing, Extinction, Performing

அறம் பாடுதலின் பயில்நிலை முக்கியத்துவம்: கிழக்கிலங்கைத் தமிழ் அறக்கவிகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

பேராசிரியர். சின்னத்தம்பி சந்திரசேகரம்,
பேராசிரியர்,
தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கட்டுரைச் சுருக்கம்

அறம்பாடுதல் என்றால் அறுந்துபோகப் பாடுதல் அல்லது சாபமிடுதல் என்று பொருள்படும். எவ்வாறாயினும் இந்த அறம்பாடுதல் மரபினுள்ளே சமூக அநீதிக்கெதிரான குரல் முதன்மைப்பட்டு நிற்கின்றது. தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் நீண்டகாலமாக இருந்து வந்திருக்கின்ற அறம்பாடுதல் மரபு கிழக்கிலங்கைத் தமிழ் இலக்கியத்திலும் ஒரு அளிக்கைநிலை இலக்கியமாக பயிலப்பட்டு வந்திருக்கின்றது. அந்தவகையில், அறப்பாடல்களின் உருவாக்கத்திலும் பயில்விலும் சமூக நம்பிக்கை என்பது முக்கிய விடயமாக உள்ளது. தமது சூழலில் நடக்கின்ற தீய செயல்களுக்கு எதிரான உணர்வு வெளிப்பாடுகளாகவே அறப்பாடல்கள் பெரும்பாலும் அமைகின்றன. அத்துடன் தம் பிரதேசத்தில்; அதிகாரம் மிக்கவர்களின் மக்கள் விரோதச் செயல்களுக்கு எதிராக இப்புலவர்கள் அச்சமின்றித் தம் எதிர்ப்பினை வெளிப்படுத்திவந்துள்ளனர். அதற்கும் மேலாக அறம் பாடுவதை இப்புலவர்கள் தம் தொழில்சார்ந்த சடங்குமுறைச் செயற்பாடாகவும் பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் மனிதருக்குத் தீங்கு விளைவிக்கும் மிருகங்கள்/ பிராணிகள் மீதும் அறம்பாடினர். எவ்வாறாயினும் இப்பிரதேச மக்கள் மத்தியில் சமூகத் தொடர்பாடலில் அறம்பாடுதல் முக்கிய கூறாக இருந்து வந்தபோதும் அப்பாடல்கள் அழிவை / தீங்கை ஏற்படுத்துபவை என்ற நம்பிக்கையும், சமூக அதிகார வர்க்கத்தினர் இப்பாடல் மரபின்மீது கொண்டிருந்த வெறுப்புணர்வும் காலவோட்டத்தில் அறம்பாடுதல் மரபு வழக்கொழிந்துபோக வழிசமைத்துவிட்டன. அந்த வகையில் கிழக்கிலங்கைத் தமிழர்கள் மத்தியில் 'அறம்பாடுதல்' எவ்வாறு பயிலப்பட்டு வந்துள்ளது, அதன் சமூக முக்கியத்துவம் என்ன என்பன பற்றி நோக்குவது அந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. இந்த ஆய்வு கள ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

கருச்சொற்கள்

அறம்பாடுதல், சடங்குமுறை, சாபமிடுதல், அறுந்துபோதல், அளிக்கைநிலை

முன்னுரை

அறம்பாடுதல் என்ற சொல் அறப்பாடு என்ற சொல்லின் திரிபாகும். அறம்பாடுதல் என்றால் அறுந்துபோகப் பாடுதல் அல்லது சாபமிடுதல் என்று பொருள்படும் என்பர். (மஜித் 158). 'அறம்' என்ற சொல்லுக்கு தீப் பயனுண்டாக்கும் சொல் என்றும், 'அறம் பாடுதல்' என்ற தொடருக்கு வசைபாடுதல் என்றும் கழகத் தமிழ் அகராதி பொருள்கொள்கின்றது.

அதேவேளை அறக்கவி அல்லது அறம்பாடுதல்; என்பது அற இலக்கியத்தைச் சுட்டவில்லையாயினும் சமூக அநீதிக்கெதிரான குரல் இந்த அறம்பாடுதல் மரபினுள்ளே முதன்மைப்பட்டு நிற்பதை நாம் அவதானிக்க முடியும். இந்த அறம்பாடுதல் மரபு தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் நீண்டகாலமாக இருந்து வந்திருக்கின்றது. எடுத்துக்காட்டாக பல்லவர்கால இலக்கியமான நந்திக்கலம்பகம் பல்லவ மன்னனான நந்திவர்மனைக் கொல்வதற்காகப் பாடப்பட்டது என்ற வரலாற்றுக் குறிப்பு அக்காலப் புலவர்கள் மத்தியிலே இத்தகைய வழக்கு இருந்ததைக் காட்டுகின்றது.

நந்தியின் சகோதரர்கள் அவனைக் கொல்வதற்குப் பலவிதமான சூழ்ச்சிகள் செய்தும் முடியாமல் போகவே, அவருள் ஒருவன் தான் நந்திமேல் நச்செழுத்தும் தீமையும் அமையப் பாடல் பாடி அவனை அழிப்பதாக எண்ணி, இக்கலம்பகத்தை இயற்றினான். இதனை அறிந்த மந்திரிகள் அந்நூலைக் கேட்கலாகாதென்று நந்திக்கு அறிவுறுத்தியும் அதன் சிறப்பை அறிந்த மன்னன் தான் இறப்பதே ஆனாலும் அக்கலம்பகத்தைக் கேட்டே இறக்க வேண்டும் என்று எண்ணி அக்கலம்பகத்தைப் பாடக் கேட்டு இறந்தான் என்று தொண்டைமண்டலச் சதக உரையில் எழுதப்பட்டுள்ளது. இவ்வரலாற்றைப் பின்பற்றி சிவஞான முனிவரும் சோமேசர் முதுமொழி வெண்பாவில் 'நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' எனத் தொடங்கும் வெண்பாவில் பாடுகின்றார். (அருணாசலதேசிகர் 20-22)

அவ்வாறே வசைக்கவியில் வல்லவரான கி.பி.15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காளமேகப் புலவர் திருமலைராயனது அரச சபையில் அதிமதுரக்கவிராயரை கவிதைப் போட்டியில் வென்ற சந்தர்ப்பத்தில் அரசன் அவரைப் பாராட்டாமலும், பரிசு வழங்காமலும் அவமதித்த போது கோபமுற்றுப் பாடிய வசைக்கவிகளை சு.ஸ்ரீகந்தராசா அறக்கவிகளாக எடுத்துக் காட்டுகின்றார். அவர் உதாரணம் காட்டும் பாடல்களில் ஒன்று பின்வருமாறு:

கோளர் இருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளால் நின்று கதறுமூர் - நாளையே
விண்மாரி யற்று வெழுத்து மிகக் கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்

காளமேகப் புலவரின் சாபத்தின்படியே திருமலைராயன் பட்டினம் சில காலத்தில் அழிந்தொழிந்ததாக அவர் கூறுகிறார். (ஸ்ரீகந்தராசா 104)

இவ்வாறு தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் நீண்டகாலமாக இருந்து வந்திருக்கின்ற அறம்பாடுதல் மரபு கிழக்கிலங்கைத் தமிழ் இலக்கியத்திலும் ஒரு அளிக்கைநிலை இலக்கியமாக பயிலப்பட்டு வந்திருக்கின்றது. கிழக்கிலங்கைக் இலக்கிய (வாய்மொழி) மரபில் 'அறம்பாடுதல்' என்பது தனித்துவமானதொரு பகுதியாக இருந்துவந்தபோதும் அது பற்றி அதிகம் பேசப்படவில்லை. அப்பாடல்கள் மந்திரத் தன்மையுள்ளனவாக கருதப்பட்டு வந்தமை இதற்கொரு காரணமாக இருக்க வேண்டும். கிராமிய மக்கள் பேச்சு வழக்கில் இந்தப் பாடல்களை 'அறம்' என்றே கூறுகின்றனர். இப்பிரதேசத்தில் அறக்கவியைத் 'திட்டுக்கவி' என்று அழைக்கும் வழக்கும் இருந்துள்ளது என்பார். (மஜித். 158)

அறம் பாடுகின்ற புலவர்களின் வாக்குப் பலிக்கும்; அப்பாடல்கள் மந்திர சக்தி வாய்ந்தவை என்ற நம்பிக்கை கிராமிய மக்கள் மத்தியில் இருந்துவந்துள்ளது. அறம் பாடுவதற்கும் ஏனைய பாடல்களைப் பாடுவதற்கும் வேறுபாடுண்டு. முக்கியமாக அறம் பாடுதல் புலவரின் கோப உணர்வு சார்ந்தது. அதாவது ஒருவரது செயல் தொடர்பாக புலவருக்கு மிகுந்த கோபம் ஏற்படுகின்றவிடத்து அந்நபருக்குத் தீங்கொன்று நடக்குமாறு சபிப்பதாக இப்பாடல் அமையும். வெறுமனே கோப உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அது அமையாது. தும் பிரதேசச் சூழலில் நடக்கின்ற தீய செயல்களுக்கு எதிரான உணர்வு வெளிப்பாடுகளாகவே அறப்பாடல்கள் பெரும்பாலும் அமைகின்றன. தம்பிலெவ்வை அண்ணாவியார் என்பவர் பாடிய பின்வரும் அறப்பாடல் கிராமத்தில் நடக்கும் களவுச் செயலுக்கு எதிரான குரலாக அமைகின்றது.

செம்பு களவெடுக்கும் தோசி - நீ
சுறட்டை அலியென நாமம் வீசி
உரலை உறுட்டுவது லேசி - நீ
உலக்கை களவெடுத்தால் நாலு காசி - நீ
தென்னை மரத்தினி லேறக் - காகந்

துரத்தியே கொத்தத்
தெரியும் பார் செம்பின் வேகம்

(இஸ்ஸதீன் மற்றும் தௌபீக்ஹசன் 192)

தண்ணீர் குடிக்கும் தனது வெண்கலச் செம்பினைக் களவெடுத்தவன் மீது பாடப்பட்ட இந்த அறப்பாடலில் களவுக்கு எதிரான புலவரின் கடுமையான கோபம் வெளிப்படுகின்றது. குறிப்பிட்ட நபரையும், அவனது தொழிலையும் மிக இழிவுபடுத்துகின்றார். தோசி, சுறட்டை[1], நளவன்[2], நாய் என்றெல்லாம் அவனை இழிவுபடுத்துவதுடன், அவனது களவுச் செயல்களையும் இழிவுபடுத்துகின்றார். இவையெல்லாம் களவுக்கு எதிரான தீவிர எதிர்ப்புக் குரலாகவே அமைகின்றன. இறுதியில் இத்தகைய செயலைச் செய்தவனுக்கு தீமை/அழிவு ஏற்பட சாபமிடுவது அதன் உச்சநிலையைக் காட்டுகின்றது. ஆ.இ. சேகுமதார் புலவர் பள்ளிவாசலில் வைத்துத் தன் மிதியடிக்கட்டையைக்[3] களவெடுத்தவன் மீது பாடிய அறம் பின்வருமாறு அமைகின்றது.

மட்டில் அடங்காத மன்னவா - உன்னை
வணங்கும் திருப்பள்ளி வாசலில்
கட்டை களவெடுத்த கள்ளனை - இங்கு
கலங்கிடச் செய்திடு யாறப்பு

இங்கு களவு செய்தவனை வசை பாடாதுவிடினும் அவனுக்குத் தீமை நேர இறைவனை வேண்டுகின்றார். வேலாப்போடியார் என்ற புலவரின் அறப்பாடலொன்று கிராமத்து இயற்கை அழிப்புக்கு எதிரான குரலாக அமைகின்றது. கிராமங்களில் பொது இடங்களில் நிற்கும் நிழல் தரும் மரங்கள் மக்களுக்கு ஓய்வு நேரங்களில் ஓய்வையும் சுகத்தையும் அளிக்கும் இடங்களாக அமைந்துள்ளன. அவ்வாறு தமது ஊரின் (கோளாவில்) மத்தியில் நின்று நிழல் கொடுத்த மருதமரம் ஒன்று அவ்வூர் செல்வந்தர் ஒருவரால் வெட்டப்பட்டபோது வேதனையும் கோபமும் கொண்ட வேலாப்போடியாரால் பின்வரும் அறம் பாடப்பட்டது.

[1] *சிரட்டை, சுறட்டை – தேங்காய் ஓடு. பேச்சு வழக்கில் தீயநடத்தைகள் உடையவனை அல்லது மற்றவருக்குப் பிரயோசனம் இல்லாதவனை சுறட்டை எனக் குறிப்பிடுவர். செம்பைக் களவெடுத்தவனின் பெயர் 'சுறட்டலி' என்பதால் சுறட்டை அலி என்று சிலேடையாக கேலிபண்ணப்படுகின்றான்.*

[2] *மட்டக்களப்புச் சாதியமைப்பில் தாழ்ந்த சாதிப் பிரிவினராகக் கொள்ளப்படுபவர்களில் நளவரும் ஒரு பிரிவினராகும். இவர்களின் தொழில் கள் இறக்குவதாகும். செம்பு களவெடுத்தவனின் தொழில் மரமேறுவதாகும். எனவே அவனை நளவன் என்று இழிவுபடுத்துகின்றார்.*

[3] *மிதியடி: பாதுகை, செருப்பு எனப் பொருள்படும். இதன் பாதம் மரத்தால் ஆனது. இறப்பரால் ஆன பாதணி அறிமுகமாக முன்னர் மியடிக்கட்டையைப் பயன்படுத்தினர்.*

முத்தர் பாண்டியர் மூவர் இருக்கின்ற
மத்தி யானமருத நிழல்தனைக்
கத்தி கொண்டவன் கந்தறவெட்டினான்
சக்தி வேலவன் தலையற வெட்டுவாய்

(கந்தையா 231)

'மத்தி யானமருத நிழல்' என்ற அடி ஊருக்கு மத்தியில் நின்று நிழல் தரும் மரம் எனவும், மத்தியான நேரத்தில் நிழல் தரும் மரம் எனவும் இரு பொருள்பட சிலேடையாக அமைந்துள்ளது. இவ்வாறு நிழல் தந்த மரத்தை வெட்டியவனை அழிக்குமாறு முருகனை வேண்டுகின்றார். இங்கு 'தலையற வெட்டுவாய்' என்ற இறுதித் தொடர் இயற்கை அழிப்புக்கு எதிரான புலவரின் கடுமையான கோப உணர்வைப் புலப்படுத்தி நிற்கின்றது. அத்துடன் கிராமத்தில் அதிகாரம் மிக்கவர்களின் மக்கள் விரோதச் செயல்களுக்கு எதிராக இப்புலவர்கள் அச்சமின்றித் தம் எதிர்ப்பினை வெளிப்படுத்திவந்துள்ளனர் என்பதையும் இப்பாடலும், அதனுடன் தொடர்புபட்ட கதையும் எடுத்துக்காட்டுகின்றன.

இதேபோல் பசித்தவருக்குக் கொடுக்காத செயல்களுக்கு எதிரான குரலையும் பல அறப்பாடல்கள் காட்டுகின்றன. இறக்காமம் என்ற ஊரில் ஆ.இ. அப்துல் றகுமான் ஆலிம் என்பவருக்குத் தேநீர்க் கடைக்காரன் ஒருவன் தேநீர் இல்லை என்றபோது பாடிய பாடல் பின்வருமாறு:

சூலாக்கும் கோலாக்கும் சுடுகாட்டுப் பாலாக்கும்
ஏலாக் கலந்தனுக்கும் இறக்காமத்தில் கடையாமா?

(அப்துல் றகுமான் ஆலிம்)

இந்த அறப்பாடல் குறிப்பிட்ட கடைக்காரனையும், அவனது தேநீரின் தன்மையையும் இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. தேநீரை மாதவிடாய்க் குருதிக்கும், மாட்டின் மலத்திற்கும், இறந்தவருக்கு ஊற்றும் பாலுக்கும் ஒப்பிட்டு இழிவுபடுத்துவதோடு கடைக்காரனின் உடல் வலுவையும் பழிக்கின்றார்.

இளம் பெண்ணைக் கைவிட்டுச் சென்றவன் மீது மீராஉம்மா என்ற கிராமியப் பெண் புலவர் பாடிய அறம் சமூகத்தில் பெண்களைக் கைவிட்டுச் செல்லும் ஆண்களுக்கு எதிரான வன்மையான குரலாகவே அமைகின்றது. பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட இப்பாடல் அப்பெண்ணின் கூற்றுமுறையாக அமைந்துள்ளது. முக்கியமாக இப்பாடலில் ஏமாற்றிச் சென்றவன் இப்பிறவியிலும் மறுபிறவியிலும் கேடுகளை அநுபவிக்கப்போவதாக வசை பாடப்படுகின்றது.

அடமடயா சாம்பிராணி என்ர மனசத் தெரியா உனக்கு
பத்தாம பத்தி நீ ஒண்ட பண்ணயிலே நீ உழுகுவா
பத்தி எரிவாய் நீ பண்ணயிலே நீ உழுவாய்
சுத்தும்டா என் நெருப்பு நீ சூழ்ந்திருக்கும் மாளிகையில்
கறுமம் புடிப்பாய் நீ கக்கிசத்தில் வந்திடுவாய்...

(மீராஉம்மா. 1999)

என்று அவனைப் பலவாறு வசை பாடுவதாகவும் சாபமிடுவதாகவும் பாடப்படுகின்றது. பாடலின் பிற்பகுதி மறுமையிலே அவன் அநுபவிக்கவுள்ள கொடிய துன்பங்களை தண்டனைகளைக் கூறுவதாக உள்ளது.

கொமர அலைத்த கொடும்பாவி எங்கே என்று
கொடிய நரகம் கூட்டிவரச் சொல்லிடுமாம் அந்த
நரகத்துக்கு மடயா நீ ஆளாகப் போறேயோடா
காலுக்குச் சங்கிலியாம் கழுத்தில ஒரு மாலயுமாம்...

(மீராஉம்மா. 1999)

என நரகத்தில் அநுபவிக்கவுள்ள பல்வேறு கொடுமைகளைப் பாடுகிறார். எனவே பெண்ணை ஏமாற்றுவது என்பது கொடிய பாவச் செயலாகும் என்ற சமூக அறம் இங்கு வலியுறுத்தப்படுகின்றது. இக்கருத்து அழுத்தம் மறுமைக் கொடூரம் பற்றிய நம்பிக்கையின் ஊடாக அழுத்தப்படுகின்றது. இங்கு அச்சமூட்டுதல் உள்ளார்ந்த அம்சமாக உள்ளது.

ஆகவே தனி மனிதர்கள் மீது பாடப்பட்டுள்ள அறப்பாடல்கள் கிராமியப் புலவர்களின் சமூகம் சார்ந்த எதிர்ப்புணர்வின் வெளிப்பாடாக, அல்லது விமர்சனங்களாகவே அமைவதைக் காண முடிகின்றது.

அறம் பாடுவது என்பது தமக்குக் கேடு செய்பவர்கள் மீது சாபமிடும் அமைப்பில் பெரும்பாலும் அமைந்தபோதிலும் சில அறப்பாடல்கள் அஃறிணை உயிர்கள் மீது பாடப்பட்டவையாகவும் உள்ளன. முக்கியமாக விவசாயத் தொழிலில் ஈடுபட்ட இப்பிரதேச மக்கள் அத்தொழிலில் எதிர்கொண்ட சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 'அறம்' பரிகாரமாக அமையும் என நம்பினர்.

மீராஉம்மா என்பவர் தமது ஊரில் வேளாண்மை மீது புழுக்கள் பரவி அழிவினை ஏற்படுத்தியபோது அதனால் வேதனையுற்று அப்புழுக்கள் அழியுமாறு அறம் பாடியுள்ளார். இப்பாடல் குறிப்பிட்ட வயலில் புழுக்கள்; செய்த அழிவை அநியாயச்

செயலாக எடுத்துக் கூறி, அப்புழுக்களைச் சபிக்கும் அமைப்பில் உள்ளது. இறுதியில் 'நீதியோ இது செய்த சோதி மண்ணாணை' என அவை சபிக்கப்படுகின்றன. இத்தொடர் மந்திர இறுதியில் அமையும் உச்சாடனத் தன்மையை ஒத்துள்ளது. இது மந்திரத்திற்கும் அறப்பாடலுக்கும் இடையில் உள்ள உறவைப் புலப்படுத்துகின்றது. தமக்குத் தீங்கு செய்யும் மனிதருக்குக் கேடு விளைவிக்கப் பாடும் அறம் இங்கு தீங்கு செய்கின்ற அஃறிணை உயிர்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இப்பாடலை அவர் பாடிய பின்னர் அவ்வயலில் நாசம் செய்த புழுக்கள் அழிந்ததாக மீராஉம்மாவும் அப்பிரதேச மக்களும் நம்புகின்றனர். இது அறம் பாடுவதிலே இந்த மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகின்றது.

இதுபோல் பன்றி மீது அறம், பயிரை நாசம் செய்த எலிக்கு அறம், வேளாண்மை திண்ட பசுவுக்கு அறம் ஆகிய அறப்பாடல்களும் பயிரை அழித்த குறிப்பிட்ட மிருகங்கள் இறந்துபோகும்படி சாபமிடும் அமைப்பைக் கொண்டனவாகும்.

வில்லம்பினாலும் விசை மிகுந்த குண்டாலும்
கொல்ல வொண்ணாப் பண்டியதைக் கூரவே - என்
சொல்லம்பு தைத்துருவிப் பாய்ந்ததுவே - தாரணியில்
இரணம் அற்றறுந்து போனதுவே சூ

அப்துல் றகுமான் ஆலிம் புலவர் பன்றி மீது பாடிய இந்த அறப் பாடலில் மந்திர சக்திவாய்ந்த தனது வாக்குப் பலித்து பன்றி குடல் அறுந்து இறந்துபோகுமாறு சபிக்கப்படுகின்றது. இப்பாடலின் முடிக்கும் சொல்லாகிய 'சூ' என்பது மந்திர உச்சாடன நிறுத்தச் சொல்லாகும். சேனைப் பயிரை நாசம்பண்ணி வந்த பன்றியை பல்வேறு வழிகளிலும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அப்துல் றகுமான் ஆலிம் என்பவரால் இந்த அறம் பாடப்பட்டதாகவும், அறம் பாடப்பட்ட அடுத்த நாட் காலையில் பன்றி நுழையும் வழியில் கூரிய கம்பு அதன் வயிற்றில் பாய்ந்து இறந்துகிடந்ததாகவும் கூறுவர். நேர்காணல்: சீ, சுக்கூர். மொ. அ., அக்கரைப்பற்று. 2012

கருதுலெவ்வை என்பவர் தன் தோட்டப் பயிர்களை எலிகள் நாசம் பண்ணியபோது பாடிய அறப்பாடலில் புலவரின் வேதனை உணர்வு வெளிப்பாடு முக்கியம் பெற்றுள்ளது. சேனை செய்வதற்கு அவர் பட்ட சிரமங்களை எல்லாம் வீணாக்கி எலிகள் பயிரை நாசம் பண்ணுவதை வேதனையுடன் பாடுகின்றார். ஆனால் இறுதிப் பகுதியில் அவரது கோப உணர்வின் வெளிப்பாடு தெரிகின்றது.

...இத்தனை கோபம் எரிச்சல் புகைச்சல்
எத்தனை நாளாய் காட்டிவாறாய் - உன்
பித்துக் கலங்கி பெருங்குடலத்து
பேறு பெறுவாய் பேசாமல் இருந்துவிடு

என்று கோபம் கொண்டு அவ்வெலிகள் அழிந்துபோகும்படி சாபமிட்டு முடிக்கின்றார். அறப்பாடலைத் தம் கோப உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு ஊடகமாக இப்புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

அறம் பாடுவதைக் கிராமியப் புலவர்கள் தம் தொழில்சார்ந்த சடங்குமுறைச் செயற்பாடாகவும் பயன்படுத்தியுள்ளமை தெரிகின்றது. மனிதர்கள் மட்டுமன்றி மனிதருக்குத் தீங்கு விளைவிக்கும் மிருகங்கள் பிராணிகளது செயல்களையும் இவர்கள் தீய செயல்களாகவே நோக்கியுள்ளதைக் காணலாம். இதற்கும் மேலாக தாவரங்கள் மீதும் இப்புலவர்கள் அறம் பாடியுள்ளனர். சின்னலெவ்வை, உமறுப்பிள்ளை ஆகியோர் தென்னை மரத்திற்குப் பாடிய அறப்பாடல்கள் இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும். இந்த அறப்பாடல்கள் விலங்குகளோடும் தாவரங்களோடும் பேசுவனவாக அமைந்துள்ளன. கிராமியப் புலவர்கள் தாவரங்களையும் விலங்குகளையும் மனிதர்கள்போலக் கருதுவதை இங்கே காணலாம்.

தென்னை மரங்காள் நீங்கள் செய்யும் உபகாரம் - இந்தக்
கன்னார்கள் இருக்குமட்டும் காயாது நின்றிடுவீர்

என்று ஆ.இ. உமறுப்பிள்ளை தென்னை மரத்துடன் கதைக்கின்றார்.

அறப்பாடல்களின் உருவாக்கத்திலும் பயில்விலும் சமூக நம்பிக்கை என்பது முக்கிய விடயமாக உள்ளது. ஒவ்வொரு அறப்பாடலின் முடிவிலும் அந்த அறம் பலித்து தீமை நேர்ந்தமை பற்றிய கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. தம்பிலெவ்வை அண்ணாவியாரின் அறம் பற்றிக் கூறுமிடத்து, அவரது பாடலின்படியே அவனுக்குக் காகம் கொத்த அவன் கீழே விழுந்து படுகாயங்களுடன் உயிர்பிழைத்து திருடும் பழக்கத்தையும் கைவிட்டதாகக் குறிப்பிடுவதும் (இஸ்ஸதீன் மற்றும் தௌபீக் ஹசன், 192) வேலாப்போடியார் அறப்பாடலைப் பாடவும் மரத்தை வெட்டியவன் மயங்கி வீழ்ந்து இறந்ததாகக் கூறுவதும் (கந்தையா 231), சில அறப்பாடல்கள் பலித்தமை பற்றி ஏலவே கூறப்பட்ட வாய்மொழித் தகவல்களும் இதற்கு உதாரணங்களாகும். இது “தீமை செய்தவருக்கு கேடு விளையும்” என்ற அறக் கருத்தியலை வலியுறுத்துவதை அடிப்படையாகக் கொண்டதாகும். இதுவே அறம் பாடுவதன் நோக்கமுமாகும்.

இன்றைய நிலை

கிழக்கிலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் முஸ்லிம்கள் மத்தியிலும் சமூகத் தொடர்பாடலில் முக்கிய கூறாக இருந்து வந்தபோதும் குறிப்பாக 20ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதிக்குப் பின் மக்கள் மத்தியில் அதன் செல்வாக்கு முற்றிலும் வலுவிழந்துவிட்டது. அதற்கான காரணங்களில் ஒன்று மக்கள் அவற்றை அச்சவுணர்வுடன் நோக்கி வந்தமையாகும். அறக்கவி அழிவை தீங்கை ஏற்படுத்தும் வலிமை மிக்கது என்ற கருத்து மக்கள் மத்தியில் பரவலாக இருந்துவந்தது. களஆய்வில் ஈடுபட்டபோது பலரும் அறக்கவிகளைப் பாடுவதற்கு மறுத்தமை இதன் பிரதிபலிப்பாகும். அதற்கும் மேலாக சமூக அதிகார வர்க்கம் இத்தகையதொரு விமர்சன எதிர்ப்புணர்வுக் கவிமரபு வளர்வதற்கும் தொடர்வதற்கும் தடையாக இருந்திருக்கும் என்பதையும் நாம் கவனத்திற்கொள்ளவேண்டும்.

முடிவுரை

சமூகச் அநீதிகளுக்கும் அதிகாரத்துவத்திற்கும் எதிரான தீவிரமான எதிர்ப்புணர்வே அறக்கவிகளின் ஆதார சுருதியாக அமைந்துள்ளது. அறம் பாடும் புலவர்கள் தெய்வ சக்தி மிக்கவர்களாக மதிக்கப்பட்டனர். அவர்களின் கோபத்தின் வெளிப்பாடாக அமையும் அறக்கவிகளைச் சாபமாகவும் மந்திர சக்தி மிக்கவையாகவும் மக்கள் கருதினர். அறக்கவிகள் அச்சவுணர்வோடு நோக்கப்பட்டு வந்திருப்பினும் சமூக அக்கறையும், நீதியான சமூக இருப்புப் பற்றிய பிரக்ஞையும் அவற்றின் அடிப்படையாக அமைந்தன.

துணைநூற்பட்டியல்

1. சோ, அருணாசலதேசிகர், உரையாசிரியர். *நந்திக்கலம்பகம்.* சென்னை, முல்லை நிலையம், 2007.
2. ஏ எஸ், இஸ்ஸதீன். எம் ஐ ஏ, *தௌபீக் ஹசன்,* தொகு., ஏறாவூர் வரலாறு, ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம், 2005.
3. வி சீ, கந்தையா. *மட்டக்களப்புச் சைவக் கோயில்கள் 1.* மட்டக்களப்பு, கூடல் வெளியீடு, 1983.
4. ஏ, மஜித். *தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல்.* சாய்ந்தமருது, மருதூர் வெளியீட்டுப் பணிமனை, 2007.
5. சு, ஸ்ரீகந்தராசா. *தமிழின் பெருமையும் தமிழரின் உரிமையும் (தமிழ் ஆய்வுரைகள்).* சென்னை, மணிமேகலைப் பிரசுரம், 2006.
6. அப்துல் றகுமான் ஆலிம். *அறக் கவிகள்.* கையெழுத்துப் பிரதி.
7. ஏ எல், மீராஉம்மா. *கவிகள்.* கையெழுத்துப் பிரதி, 1999.
8. சீ மொ அ, சுக்கூர். *ஒருமுக நேர்காணல்.* தொடர்பு ஹனிபா இஸ்மைல், 23 தை 2012.

REFERENCES

1. S, Arunasalathesikar. *Nanthikalampakam*. Chennai, Mullai Nilayam, 2007.
2. A S, Issatheen. *Thowpeek hasan*. M.I.A ed., Eravur Varalaru, Eravur Varalattu Aeivu Maiyam, 2005.
3. V S, Kanthaih. *Maddakkalappu Saivak Kovilgal 1*. Maddakkalappu, Koodal Velijeedu, 1983.
4. A, Majeeth. *Thenkilakku Muslim Thesaththaarin Naaddariyal*. Saienthamaruthu, Maruthur Veliyeettu Panimanai, 2007.
5. S, Srikantharajah. *Thamilin Perumaium Tamilarin Urimaium (Tamil Aievuraigal)*. Chennai, Manimegalai Prasuram, 2006.
6. Abdul Rajman Aalim. *Arak kavikal*, Manuscript.
7. A L, Meeraumma. *kavikal*. Manuscript, 1999.
8. CMA, Sukkur. *One-on-One Interview*. Haniba Ismail, 23 Jan 2012.